MIN ALAI

# மின் அலை

May 2025 | Volume : 13 | Issue 5 | Price Rs. 18.00/- | Ann. Sub. Rs. 216/-



மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சராக பொறுப்பேற்ற திரு.S.S. சிவசங்கர் அவர்களை 05.05.2025 அன்று பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள் நமது மின்வாரிய வளாகத்தில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.


**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
| --- | --- | --- |
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் 2025 ஆண்டு கிளையின் பேரவை கூட்டங்கள்





நாமக்கல்





தருமபுரி





கரூர்





மதுரை

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்
பொர்.S.அமர்நாத்

| Page | Contents |
|---|---|
| 07. | Board Order |
| 09. | Chairman's Letter |
| 10. | ஆகாஷ் ஏவுகணை அமைப்பும், உருவான கள சூழலும் |
| 13. | பத்திரிக்கைச் செய்திகள் |
| 20. | மின்துறையில் செயற்கை நுண்ணறிவு |
| 22. | 2025 ஆம் ஆண்டுப் பேரவை கூட்டங்கள் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 13 | மே 2025 | இதழ் 5

## தொழில்நுட்ப வளர்ச்சியும் சுய சார்பு தன்மையும் கொண்ட வெற்றி

மனித வளமும் ஆயுத பலமும் கொண்டு இதுவரை போர்கள் நடைபெற்றன. சமீப கால போர்கள் தொழில்நுட்ப ஆற்றலையும் வளர்ச்சியையும் தன் வசம் கொண்டு போர்கள் களம் காணப்படுகிறது. இதில் இருந்து அறியப்படும் உண்மை யாதெனில் எந்த நிறுவனம் விஞ்ஞான வளர்ச்சியை தொழில்நுட்ப சாதனங்களில் புகுத்தி முறையாக பயன்படுத்துகிறதோ அந்த நிறுவனமே முன்னணி நிறுவனங்களாகவும் வெற்றி பெறும் நிறுவனமாக திகழும்.

இத்தருணத்தில் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயமும் உள்ளடங்கியுள்ளது. பெரும் பொருட்செலவில் வெளியில் இருந்து வாங்கப்படுவதைவிட அவற்றை நாமே உள்நாட்டில் உயர் தொழில் நுட்பத்துடன் தயாரிப்பது சாலச் சிறந்தது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. சுயசார்பின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது (உணர்த்தப்பட்டுள்ளது).

நமது நிறுவனமும் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பங்களையும், நவீன விஞ்ஞான வளர்ச்சியையும் தனது வளர்ச்சிக்காக உரிய பொழுதில் வாரியத்தில் சேர்த்து வருவது சிறப்பு. பல்வேறு நவீன மயமாக்குதலில் தமிழ்நாடு மின்வாரியம் தன் தடத்தை பதிப்பதில் முதன்மையாக உள்ளது என்பதும் வரலாறு ஆகும். ஆயினும் இது களப் பணிகளில் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளதா என்பது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறி ?

குறைந்த மனித வளத்துடன் பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலச் சூழலில், நவீன கருவிகள், வாகனங்கள், தொழில்நுட்பங்கள் ஆகியன களத்தின் உடனடி தேவையாக உள்ளது. இதனை வாரிய அளவில் புரிந்து, அதற்கான செயல் திட்டங்களை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். மாற்றம் என்பது மேலிருந்து கீழே தான் வர வேண்டும்.

அன்றாட பணிகளை மேற்கொள்ளும் பிரிவு அலுவலகங்களுக்கு இதுவரை என்னென்ன கருவிகள் அல்லது நவீன கருவிகள் வாங்கப்பட்டுள்ளது என்பதை சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மின்வாரியத்தில் கம்பம் நடுவதற்கும், குழி எடுப்பதற்கும், கம்பி இழுப்பதற்கும், மின்மாற்றி அமைப்பதற்கும், எவ்வித நவீன தொழில்நுட்பமும் உட்புகுத்தப்படவில்லை, மிகவும் நவீனமான கருவிகள் பல இன்று சந்தைகளில் உள்ளது. ஆனாலும் இவற்றை களப்பணிகளில் உட்கொணரவில்லை. மக்களின் மின் தேவைகளை பூர்த்தி செய்யும் இடங்களில் உள்ள பிரிவு அலுவலகங்களில் நவீன மயம் எந்த அளவில் உள்ளது என்பது சிந்திக்க வேண்டிய விஷயம்.

கணினிகளும், பிரிண்டருகளுமே நவீனப்படுத்தப்படவில்லை என்பது கண்கூடு.

இந்த நவீன காலத்தில் ஒரே டிராக்டரில் குழி தோண்டுவது முதல் கம்பம் தூக்குவது, கம்பத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கும் ஒரே வாகனம் என பல பயன்பாடுகளுக்கு உறுதுணையாக உள்ளது. ஆனால் வாரியம் இதுவரை அது போல் ஒரு வாகனத்தை கூட வாங்கவில்லை என்பதே நவீன மயமாக்களில் நமது நிறுவனம் எவ்வளவு பின் தங்கியுள்ளது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மின் தடை நேரம் அந்த நிறுவனத்தின் உலக அளவிய அங்கீகார குறியீட்டை நிர்ணயிக்கிறது என்பதே எதார்த்தம். ஆனால் மின்தடை நீக்கத்திற்கு விரைந்து செயல்பட இதுவரை அமுல்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியும் நவீன கருவிகளும் பணியுத்திகளும் என்ன???

நமது மாநிலத்தை விட சிறிய மாநிலங்களில் கூட இப்போழுது RMU களுக்கு என்று தனியே கட்டுப்பாட்டு அறையுடன் முறையாக பராமரிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. நம்மிடமோ வாங்கியவற்றை பராமரிக்க கூட முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் தினந்தோறும் மின்விபத்தை தவிர்ப்பது குறித்து ஆதங்கப்பட்டு வருகிறோம்.

பெரும் பொருட்செலவில் வாங்கப்படும் முக்கியமின் சாதனங்களை பராமரித்திட உரிய கவனமும் நவீனத்துவம் சேர்க்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும் நவீன மயமும் உயர் தொழில்நுட்பமும் தான் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு முக்கியம் என்பது உணர வேண்டும் உணரப்பட வேண்டும்.

**நாட்டைக் பாதுகாப்பது ராணுவம்**
**நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளம் மின்சாரம்**

## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே!
வணக்கம்.

ஏப்ரல் மாதம் 22ம் நாள் அன்று பஹல்காமில் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த அஞ்சலியினை செலுத்துகிறது. இதற்கான பதில் நடவடிக்கையான ஆபரேஷன் சிந்தூரில் வீரமரணம் அடைந்த நமது தேசத்தின் ராணுவத்தினருக்கு வீர அஞ்சலியினை பொறியாளர் சங்கம் செலுத்துகிறது. மேலும் பதில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்த செயல்கள் மூலம் சரியான வெற்றியை தேடித்தந்த நமது முப்படைகளுக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 04.03.2025 அன்று வாரிய தலைவருடனான திட்டமிட்ட பேச்சுவார்த்தையில் நாம் எழுப்பிய கோரிக்கையான "EL additional charges allowance to GTS முறையாக பரிசீளிக்கப்பட்டு, செயலக கிளையிருந்து ஒரு முழுமையான உத்தரவு 24.04.2025 அன்று வழங்கப்பட்டுள்ளது. எரிவாயு சூழலில் மின் நிலையங்களில் கூடுதல் பொறுப்பு மேற்கொண்டு, கூடுதல் பொறுப்புப்படி கோரிய பொறியாளர்கள் மற்றும் பொறுப்புப்படி (Additional charge allowance) பெற்று தணிக்கை குழுவினரால் (Audit slip) எழுப்பப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கும் இதன் மூலம் உரிய தீர்வு காணப்பட்டுள்ளது. நமது

கோரிக்கையினை ஏற்று உரிய உத்தரவுகள் வழங்கி உதவிய வாரியத்தலைவர் அவர்களுக்கும், இணை மேலாண்மை இயக்குனர் / நிதி மற்றும் வாரிய உயரதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, இயக்கத்திலுள்ள மூன்று 765 KV SS, ஐந்து 400 KV SS, ஐந்து 230 KV SS, 78 எண்ணிக்கையிலான 110 கேவி துணை மின் நிலையம் மற்றும் 180க்கும் மேற்பட்ட 33KV துணை மின் நிலையங்களுக்கான புதிய பணியிடங்கள் உருவாக்கப்படாமல் Diversion, Deputation, Redeployment முறையில் பணியாளர்களை பணியமர்த்த முயற்சிப்பதால் ஏற்படும் இழப்புகள், நிர்வாக சிக்கல்கள் குறித்து கடந்த 29.04.2025 அன்று வாரிய தலைவரிடம் விரிவாக விவாதித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அன்றைய தினம்,

- தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம்.
- இளநிலை பொறியாளர் / முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பதவி உயர்விற்கான உயர்த்தப்பட்ட பணி அனுபவ காலத்தை திரும்ப பெறுதல்.
- கஜா புயலில் பாதிப்புகளின் போது மேற்கொள்ளப்பட்ட மறு சீரமைப்பு பணிகள் குறித்து தணிக்கை குழுவின் முறையற்ற தணிக்கை சீட்டுகள் மற்றும் முறையற்ற சம்பள பிடித்தம் கைவிடுதல்
- முறையற்ற ஊர் மாறுதல் உத்தரவுகள் திரும்ப பெறுதல்.
- விருப்பஊர் மாறுதல் விண்ணப்பங்களை உடனடியாக பரிசீலித்து ஊர் மாறுதல் உத்தரவுகள் வழங்குதல்
- உள்முகத்தேர்வு நடவடிக்கைகளுக்கு தமிழக அரசின் பணியாளர் நலத்துறையிலிருந்து உரிய தெளிவுரை கேட்டு பெறுதல் மற்றும் உள்முக தேர்வுகளை விரைவில் இறுதி செய்தல்.
- உதவி செயற்பொறியாளர்களை, கூடுதல் பொறுப்பாக காலியாக உள்ள ஒரு பிரிவினை கவனித்துக் கொள்ளும் உத்தரவினை ரத்து செய்தல்

ஆகியவைகள் குறித்து முறையீடுகள் செய்யப்பட்டுள்ளது. வாரியத் தலைவர் அவர்களும் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததோடு, கஜா புயல் நிவாரண பணிகளின் மீதான தணிக்கை ஆட்சேபனைகளை உடனடியாக ஆராய்ந்து கைவிட நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த 07.05.2025 மற்றும் 21.05.2025 அன்று தலைமை பொறியாளர் பணியமைப்பு அவர்களை சந்தித்து,

- தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம்,
- உதவி செயற்பொறியாளர்களை, கூடுதல் பொறுப்பாக காலியாக உள்ள ஒரு பிரிவினை கவனித்துக் கொள்ளும் உத்தரவினை ரத்து செய்தல்
- விருப்ப ஊர் மாறுதல் விண்ணப்பங்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு ஊர் மாறுதல் உத்தரவு வழங்குதல்.
- 14/15 வருட கால பணி முடித்த அனைத்து பொறியாளர்களுக்கும் உதவி செயற்பொறியாளர் / சார்பு பதவி பெயர் மாற்றம் வழங்குதல்.

ஆகிய கோரிக்கைகள் குறித்து உரிய முறையீடுகள் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் உதவி செயற்பொறியாளர் / மின்னியல் மற்றும் இளநிலை பொறியாளர் / இரண்டாம்

நிலை மின்னியல் பதவி உயர்விற்கான தகுதியான நபர்களுக்கு தகுதிக்காண் அறிக்கை call for செய்ய வலியுறுத்தப்பட்டது. கோரப்பட்டுள்ள தகவல்கள் முழுமையாக வந்தடைந்து நிலுவையிலுள்ள உதவி செயற்பொறியாளர் / இயந்திரவியல் மற்றும் சிவில் பதவி உயர்வுகளை விரைவில் இறுதி செய்து பதவி உயர்வு உத்தரவுகள் வழங்கிட வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நிலுவையிலிருந்து வரும், இளநிலை பொறியாளர் / முதல் நிலை இயந்திரவியல் பதவி உயர்விற்கான நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு பட்டியலிட்டு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேலும் 2000, 2001ம் ஆண்டு பணியேற்பு செய்த உதவி பொறியாளர் / பயிற்சி மற்றும் 2002ம் ஆண்டு பணியேற்பு செய்த உதவி பொறியாளர் / உள்முகத்தேர்வு ஆகியோரது முன்னுரிமை சம்பந்தமான நீதிமன்ற வழக்கு கடந்த 09.05.2025 அன்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. கடந்த விசாரணையில் ஐந்து வார கால "Status quo" உத்தரவு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இம்முறையும் விவாதங்களுக்கு பின் 16.07.2025 க்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டட்டது.

பொறியாளர் சங்கத்தின் 57வது மாநில பொதுக் குழுகூட்டம், வரும் ஜூன் 14 மற்றும் 15ம் தேதிகளில் தஞ்சாவூரில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரையில் 42 கிளைகளின் ஆண்டு பேரவைக் கூட்டங்கள் உறுப்பினர்களின் ஆர்வமிக்க பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றுள்ளது. கிளைப் பொறுப்பாளர்கள் ஆண்டு பேரவை கூட்டங்களில் அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளும் வண்ணம் உரிய முன்னேற்பாடுகளை செய்திட வேண்டுகிறேன். உறுப்பினர்கள் பேரவைக் கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு இன்றைய வாரிய நிகழ்வுகளையும் மாற்றங்களையும் கண்டறிந்து, காலச் சூழலுக்குகேற்ப தங்களை தயார் செய்து கொள்ள வேண்டுகிறேன். சங்கத்தின் செயல்பாடுகள் சிறக்க தங்களது மேலான கருத்துக்களை பேரவை கூட்டங்களில் பகிர்ந்திட வேண்டுகிறேன்.

பொறியாளர் நலன் காப்போம்! தேச நலன் காப்போம்!!

ஒன்றுபடுவோம்!! போராடுவோம்!!!

வாழ்க பொறியாளர் சங்கம்.

நன்றி

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

# மணந்தனர் வாழ்த்துகிறோம்

<u>மணமகள்</u>

திரு.**R**. பாலகிருஷ்ணன், JE/NCTPS-I/TNEB,
Br.Sec./NCTPS/TNEBES
திருமதி.B. சசிகலா
தம்பதியரின் மூத்த குமாரத்தி
திருவளர்ச்செல்வி
**B. ஹரிணி, B.Pharm.**



<u>மணமகன்</u>

திரு.**V.** மகேந்திரன்
திருமதி.**D.** கிரிஜா
அவர்களின் மூத்த குமாரன்
திருவளர்ச்செல்வன்
**M. நவீன், M.Sc.** (IIT, Chennai-36).

**இருவரும் 30.04.2025 அன்று இல்லற வாழ்வில் இணைந்தனர்**
**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

மின் அலை வளர்ச்சி நிதியாக பொர்.R. பாலகிருஷ்ணன், கிளைச் செயலாளர் /
வ.செ.அ.நி. கிளை அவர்கள் ரூபாய்.1001/–அளித்துள்ளார், நன்றி

## BOARD ORDER

## TAMIL NADU TRANSMISSION CORPORATION LIMITED

ABSTRACT

TANTRANSCO System Operation / Chennai- Operation Circle Proposal for carrying out all type of maintenance and emergency works in all equipments in 765 V. 400 KV & 230 kV SS by entrusting works contract for the period of 2 Years (24 months) from the Date of utilization at various Substations Administrative approval Accorded.

TECHNICAL BRANCH

(Per.) CH TANTRANSCO Proceedings No.48 Dated 12.03.2025,
Maasi -28, Kurots varudam,
Thiruvalluvar Aandu 2056

READ 1. (per) CH TANTRANSCO Proceedings No:151 dated.28.10.2020

2. Chairman's approval dated 08.03.2025.

**PROCEEDINGS:**

The TNEB plays a vital role in the growth of the state economy by providing Electricity to the entire state from the level of Huts to the major EHT Industries and thereby structuring Tamil Nadu as a Power Rich State in the country.

EHT substations at the level of 765 KV, 400 KV and 230 KV both AIS and GIS are being established with expensive investment by TNEB and hence these substations are to be maintained with utmost care with regular and periodical maintenance.

As each sub station have expensive components such as Auto transformers. Power transformers, 400 KV, 230 KV & 110 KV breakers, LAS, CTS, PTS etc., it is very much essential to carry out periodical & Break down maintenance of the components to identify any signs of wear, damage or malfunction in order to avoid equipment failure and supply interruption.

The periodical maintenance and the breakdown of equipments in any substation are to be attended with dedication, irrespective of time, weather conditions and the speedy rectification depends purely on the skill of the work force. It is vital to provide uninterrupted power supply to the consumer by avoiding major and long duration outages and costly equipment failures.

The Chief Engineer / System operation / Chennai wing is functioning with five Operation circles namely Chennai North, Chennai South, Sriperumpudur, Thiruvalam and Villupuram comprising 62 nos of sub stations in the following categories.

1) 765 KV SS - 2Nos. 2) 400 KV SS - 11 Nos. 3) 230 KV SS - 49 Nos.

However out of 11 nos, 9 nos 400 KV substation and out of 49 nos 37 nos 230 KV substations are having more than 50 % RWE staff vacant.

Hence, it is proposed for entrusting works contract under the supervision of AE/maintenance of the respective substation for periodical maintenance and the breakdown of equipments by engaging a

team with 1no fitter I class and 2 nos Mazdoor Category II class for each 230 KV Sub station, 2nos fitter I class and 4 nos Mazdoor Category II class for each 400 KV Sub station and 3 nos Technical assistant grade - II, 2 Nos. Fitter Class I and 5 nos Mazdoor Class 11 for each 765 KV Sub station which are having more than 50 % of vacant of RWE staff and wherever there is dearth of RWE staff in 765 KV, 400 KV and 230 KV substation for a period of two years to overcome dearth of department staff as like in Telangana and Andhra Pradesh states where the Sub stations are maintained well.

Accordingly, the Tamil Nadu Transmission Corporation Ltd., hereby approves the proposal

1. For carrying out all type of maintenance and emergency works in all equipments in 765 KV, 400 KV & 230 KV SS by entrusting works contract for the period of 2 Years (24 months) from the date of utilization at various Substations having more than 50% of RWE staff vacant under the supervision of AE/maintenance of the respective substation.

2. For entrusting works contract for preventive, Breakdown Maintenance under works contract

(i) By engaging 3 nos Technical Assistant, 2 nos. fitter I class and 5 nos. Mazdoor Category II at 2 nos. 765 KV Sub stations having more than 50% of vacant of RWE staff and wherever there is dearth of un skilled staff at an estimate amount of Rs.2,71,46,852/- for two years as per PWD schedule of the rates for the year 2024-25 and to adopt the revised PWD schedule of the rates for the subsequent years.

(ii) By engaging 2 nos fitter 1 class and 4 nos. Mazdoor Category 11 at 9 nos 400 KV Sub stations having more than 50% of vacant of RWE staff and wherever there is dearth of un skilled staff at an estimate amount Rs.6,22,38,708/- for two years as per PWD schedule of the rates for the year 2024-25 and to adopt the revised PWD schedule of the rates for the subsequent years.

(iii) By engaging 1 no fitter I class and 2 nos. Mazdoor Category 11 for 37 nas 230KV Sub station having more than 50% of vacant of RWE staff and wherever there is dearth of un skilled staff at an estimate amount Rs. 13,02,05,442/- for two years as per PWD schedule of the rates for the year 2024-25 and to adopt the revised PWD schedule of the rates for the subsequent years.

By virtue of the provisions contained in sub-section (2) (a) of section 185 of the Electricity Act, 2003, the TANTRANSCO being the Transmission utility, Licensee and successor entity of Tamil Nadu Electricity Board will exercise the powers of the Telegraph Authority under the provisions of section 164 of the Electricity Act, 2003, which have already been conferred upon the Board under section 51 of the Indian Electricity Act, 1910.

// BY ORDER OF THE CHAIRMAN //

Encl: Approved model spec

S. Velmurugan
CHIEF ENGINEER/SYSTEM OPERATION (FAC)
CHENNAI

# CHAIRMAN'S LETTER

To: All Managing Directors, Directors, Chief Engineers, and Concerned Officers

Date: 21.05.2025

From: Chairman & Managing Director, TNEB

Dear All,

Subject: Urgent Review, Reconciliation, and Timely Action on Priority Projects and Issues Highlighted in Recent High-Level Reviews – Reg.

During the recent review chaired by the Hon'ble Deputy Chief Minister on the Vada Chennai Valarchi Thittam, it was noted that, out of 17 sanctioned works, one Government Order is yet to be issued. In addition, three works are experiencing delays—one pending RAS clearance and another reflecting only 5% physical progress.

Further, during interactions with the Industry Secretary and the Chief Secretary on the sidelines of an official meeting, concerns were raised regarding delays in TNEB-connected works related to Global Investors Meet (GIM), particularly those under the green energy sector. While our internal position is that there are no pending cases at our end, it is critical to revalidate and reconcile all records to avoid any miscommunication or misrepresentation of facts.

Additionally, the Managing Director of TIDCO has highlighted that, despite having made the necessary payment to TNEB for shifting a high-tension line over the under-construction TIDEL Park in Tiruchirappalli, no work has commenced, although the tender has reportedly been finalised.

Similarly, focused and continuous monitoring is required for ongoing and announced projects under various Central and State schemes, including iconic infrastructure initiatives and the Revamped Distribution Sector Scheme (RDSS), which targets the reduction of Aggregate Technical & Commercial (AT&C) losses to pan-India benchmark levels. Generation projects (thermal, wind, solar), as well as critical transmission and distribution initiatives—including planned and emergency maintenance works—must be pursued with equal intensity. Any delays, at any level, must be identified and addressed swiftly.

Just as we successfully met the summer power demands with foresight and coordination, we must now extend the same level of commitment to these infrastructure and investment-linked responsibilities. TNEB must be a responsive institution displaying a professional and sensitive approach to the expectations with regard to the implementation of high-priority or need based projects and works addressing the public and stakeholder needs.

Accordingly, all concerned officers are hereby directed to:

1. Reconcile and report the current status of all works under Vada Chennai Valarchi Thittam and GIM-linked projects without delay.

2. Review and resolve issues flagged by TIDCO and other stakeholder departments, ensuring timely and effective execution.

3. Accelerate internal processes such as securing administrative, BLTC/Board approvals, issuing purchase orders, and advancing on-site execution.

4. Ensure transparency and consistency in applying contract provisions (including liquidated damages) and in the processing and clearance of bills.

5. Eliminate procedural delays at all levels, and ensure stakeholders receive clear, accurate, and timely updates.

6. Comply strictly with all applicable Acts, Rules, Regulations, and contractual obligations, ensuring that decision-making remains objective, transparent, and accountable— minimising inconvenience to consumers and stakeholders.

7. Establish robust grievance redressal mechanisms, ensuring that concerns raised by consumers, local bodies, industries, MSMEs, agricultural consumers, contractors, andservice providers are addressed promptly, transparently, and in a structured, accountable manner.

8. Strengthen coordination with Finance and Audit wings to ensure timely adherence to contractual obligations, track fund flows effectively, and prevent unnecessary delays in project execution and payments.

It may also be reiterated that functional heads—particularly operational leaders—must take ownership of outcomes and ensure that intended project goals are delivered efficiently and within stipulated timelines.

Let us all rededicate ourselves to strengthening TNEB's standing as a responsive, professional, and performance-driven institution in line with the State's developmental aspirations.

Yours sincerely,
(J. Radhakrishnan, I.A.S.)
Chairman & Managing Director
Tamil Nadu Electricity Board

## ஆகாஷ்' ஏவுகணை அமைப்பும், உருவான கள சூழலும்...

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கட்டமைப்பின் வலிமை மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. 26 அப்பாவி பொதுமக்களின் உயிர்களைக் கொன்ற பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, மே 7, 2025 அன்று தொடங்கப்பட்ட ஆபரேஷன் சிந்தூர், துல்லியமான, உயர்தொழில் நுட்பம் சார்ந்த, மிகச்சரியான திட்டமிடுதலுடன் கூடிய ஒரு நடவடிக்கை. இதில் இந்திய தயாரிப்பான ஆகாஷ் ஏவுகணை மிகப்பெரிய பங்கு வகித்துள்ளது.

இந்த சரியான, துல்லியமான திட்டமிடுதலுக்கும் மேலாக, உயர் தொழில்நுட்பம் கொண்ட உள்நாட்டு போர் தளவாடங்களை, இந்த ஆபரேஷன் சிந்தூரில், ராணுவ நடவடிக்கைகளில் இணைத்தது தான் மிகப்பெரிய வெற்றியை தேடி தந்துள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (DRDO) முக்கிய திட்டங்களுக்கு ஹைதராபாத் முக்கிய தளமாக உள்ளது. இங்கு உருவாக்கப்பட்ட பல தயாரிப்புகள் சமீபத்தில் ஆபரேஷன் சிந்தூரின் போது, முக்கிய பங்கைக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று, போர் காலகட்டத்தில் எல்லைக்கு அப்பால் இருந்து ஏவப்படும் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளுக்கு எதிராக மற்ற ஆயுத அமைப்புகளுடன் சேர்ந்து, அரணாக மாறி குறுகிய தூர இலக்கை தாக்க தரையிலிருந்து வான்நோக்கி ஏவப்படும் ஏவுகணை 'ஆகாஷ்' ஆகும்.

ஆகாஷ் ஏவுகணை ஒரு நடுத்தர தாக்கும் திறன் கொண்ட, தரையிலிருந்து வான்நோக்கி ஏவப்படுகின்ற ஏவுகணையாகும். 18 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள இலக்கினை தாக்கும் திறன் கொண்ட Multifunction Radar மற்றும் சென்ட்ரல் Acquisition Radar துணையுடன் 120 கிலோ மீட்டர் தொலைவுள்ள இலக்கினை கணிக்க வல்லது. துல்லியமான 3D அளவுகோலை கொண்டு இயங்கவல்லது.

ஒரே நேரத்தில் பல இலக்குகளை தாக்கும் திறன் உள்ளது. இது போர் விமானங்கள், சீர் வேக ஏவுகணைகள் மற்றும் கண்டங்களுக்கு இடையேயான ஏவுகணைகள் போன்றவற்றை இடைமறித்து அழிக்க வல்லது.

ஆகாஷ் ஏவுகணை தான் உள்நாட்டு தொழில் நுட்பத்துடனான, நிலத்திலிருந்து வானில் உள்ள இலக்கிற்கு ஏவக்கூடிய (Surface to Air) பரிசோதிக்கப்பட்ட முதல் ஏவுகணை ஆகும். ஆகாஷின் உள்நாட்டு வடிவமைப்பு, விரைவான பதிலளிப்பு திறன் மற்றும் ஒருங்கிணைந்த விமான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு (IACCS) போன்ற மேம்பட்ட கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு ஆகியவை நிகழ்நேர அச்சுறுத்தல் நடுநிலைப்படுத்தலை செயல்படுத்தின.

இந்தியாவின் பல அடுக்கு வான் பாதுகாப்பு வலையமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆகாஷ் ஏவுகணை அமைப்பு, எதிரிகளின் வான்வழி இலக்குகளை வெற்றிகரமாக இடைமறித்து, எதிரிகளின் ஊடுருவல்களைத் தடுத்து, முக்கியமான உள்கட்டமைப்பைப் பாதுகாத்தன. பல வான்வழி அச்சுறுத்தல்களை ஒரே நேரத்தில் கண்காணித்து, குறிவைத்து, அழிக்கும் அதன் திறன் அதிக வெற்றி விகிதத்தை உறுதி செய்தது, ஆகாஷை இந்தியாவின் வான் பாதுகாப்பு கேடயத்தின் ஒரு மூலக்கல்லாக விளங்கியது.

நமது முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம், ஒருங்கிணைந்த வழிகாட்டப்பட்ட ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தலைமை தாங்கியபோது, பிரபல விஞ்ஞானி பிரஹலாத் ராமராவ் அவர்களிடம் ஆகாஷ் ஏவுகணை அமைப்பை உருவாக்கும் பணியை ஒப்படைத்தபோது, மூன்று உறுப்பினர்களைக் கொண்ட முதல் குழுவில் ஒருவராக தெலுங்கானாவின் கம்மம் மாகாணத்தைச் சேர்ந்த, வாரங்கல் NIT–யில் இயந்திர பொறியியல் பட்டதாரியும், டெல்லி IIT–யில் முதுகலைப் பட்டமும் பெற்ற திரு.சந்திரமௌலி இருந்தார்.

"உள்நாட்டிலேயே புதிதாக உருவாக்கப்பட்ட ஆகாஷ் ஏவுகணை, முதல் முறையாக போர் மண்டலத்தில் பயன்படுத்தப்பட்டது, மேலும் அது வலுவானதாகவும் பயனுள்ளதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தானியங்கி ஏவுகணை அமைப்பு மற்ற நாடுகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது," என்று தனது 34 ஆண்டுகால வாழ்க்கையை 'ஆகாஷ்' வளர்ச்சியில் செலவிட்ட முன்னாள் திட்ட இயக்குனர் கட்டமனுகு சந்திரமௌலி மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

மொபைல் தளங்களில் இருந்து ஏவப்படும் இந்த ஏவுகணை, உயரம் அல்லது அளவைப் பொருட்படுத்தாமல், போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், UAVகள், சப்சோனிக் க்ரூஸ் ஏவுகணைகள், சூப்பர்சோனிக் வேகத்துடன் கூடிய ஸ்மார்ட் குண்டுகள் மற்றும் தானியங்கி வான் பாதுகாப்பு செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு இலக்குகளை ஒரே நேரத்தில் நடுநிலையாக்கும் என்று முன்னாள் DRDO–வின் சிறந்த விஞ்ஞானி சந்திரமௌலி கூறுகிறார்.

‘‘கலாம் மற்றும் பிற தலைவர்கள் ஒரு சிறப்பான பணிச்சூழல் அமைப்பை உருவாக்கினர், அங்கு ஈகோக்கள் இல்லை, இலக்குகள் மட்டுமே இருந்தன. கலாம், பிரஹ்லாத ராமராவ், ஆர்.ஆர்.பன்யம், ஜி.என். ராவ், அஜித் சவுத்ரி மற்றும் பலரிடமிருந்து நான் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். இந்த மெகா திட்டத்தை செயல்படுத்த எனக்கு பலர் உதவினார்கள். தடைகளைத்

தாண்டுவதற்கு எங்களிடையே குழுப்பணி, வெளிப்படைத்தன்மை, ஆதரவு மற்றும் உந்துதல் இருந்தன,'' என்றார்.

"திரு.கலாம் 'முதலில் தொழில்நுட்பத்தை உருவாக்குங்கள்' என்று கூறுவார், மீதமுள்ளவை பின்னர் வரும், வடிவமைப்பிலிருந்து தரை அடிப்படையிலான ரேடார் அமைப்பு, உந்துவிசை மற்றும் ஆயுதத் தலை வரை, ஆய்வகத்தில் வாரம் முழுவதும் 14 வருட வேலை. பல்வேறு கட்டங்களில் நாங்கள் பல தோல்விகளைச் சந்தித்தோம். ஆனால் எங்கள் விடாமுயற்சி ஆயுதப் படைகளுக்கு குறைந்தபட்சம் ஏதாவது ஒன்றை உருவாக்கி வழங்கிட எங்களைத் தூண்டியது," என்று திரு.சந்திரமௌலி விளக்குகிறார்.

"நமது நாட்டின் பாதுகாப்பு அமைப்புக்கு முக்கிய தூணாக மாறும் ஒரு சக்திவாய்ந்த ஏவுகணையை நாங்கள் உருவாக்குவோம் என்று நம்புவதற்கு மிகச் சிலரே தயாராக இருந்தனர். எல்லா இடங்களிலும் வெறுப்புணர்வும் இருந்தது. ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோம், ஆனாலும் நாங்கள் அமைதியாகவும், பொறுமையாகவும், விடாமுயற்சியுடனும் இருந்தோம்," என்று அவர் நினைவு கூர்ந்தார்.

DRDL-DRDO–வில் உள்ள ப்ராஜெக்ட் ஆகாஷின் முக்கிய உறுப்பினராக, 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து 2018 இல் ஓய்வு பெறும் வரை வடிவமைப்பு, மேம்பாடு, விமான சோதனை மற்றும் பயன்பாட்டு சோதனைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் பங்களிக்கும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பல குழுக்களை விஞ்ஞானி திரு.சந்திரமௌலி வழிநடத்தினார்.

முதல் வெற்றிகரமான ஏவுகணை சோதனை 1994 இல் நடந்தது, மேலும் 2006–07 இல் இறுதி கட்ட சோதனைகள் நடந்தது, அதன்பின் 2015 இல் ஆகாஷ் முறையாக இந்திய இராணுவத்திலும் மற்றும் இந்திய விமானப்படையிலும் சேர்க்கப்பட்டன.

இதனால், ரஷ்யாவிற்குப் பிறகு திடமான ரேம் ஜெட் உந்துவிசை அடிப்படையிலான சூப்பர்சோனிக் ஏவுகணைகளை வடிவமைத்து, உருவாக்கி, உற்பத்தி செய்யும் திறனைக் கொண்ட இரண்டாவது நாடாக இந்தியா மாற முடியும்.

2011 ஆம் ஆண்டு திட்ட இயக்குநரான பிறகு, திரு.சந்திரமௌலி ஆகாஷின் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஆயுதப் படைகளில் சேர்க்கப்படுவதை நெறிப்படுத்தினார், 13 DRDO ஆய்வகங்கள், ஒன்பது பாதுகாப்பு உற்பத்தி அலகுகள் மற்றும் ஐந்து ஆயுத தொழிற்சாலைகளுடன் ஒருங்கிணைத்து, உள்ளூர் தொழில்களுக்கு உற்பத்திக்காக சிக்கலான தொழில்நுட்பங்களை எளிமைப்படுத்தி மாற்றி வழங்கினார்.

பல ஆண்டு காலம் அயராது உழைத்து தயாரித்த ஏவுகணையை குடியரசு தின அணிவகுப்பில் மட்டும் பார்த்து சங்கடப்பட்டேன் இதன் முழு வலிமையை நிரூபிக்கும் காலம் என்று வரும் என்று ஏங்கி காத்திருந்தேன்

இன்று உலக வல்லுனர்கள் எல்லாம் ஆகாஷ் ஏவுகணையின் இடைமறிக்கும் திறன் 100% என்று சொல்ல கேட்கும் போது என் குழந்தை சாதித்தால் எனக்கு என்ன மகிழ்சி கிடைக்குமோ அந்த மகிழ்சி கிடைத்தது என்று ஆனந்த கண்ணீருடன் கூறியுள்ளார்.

இந்த வான் பாதுகாக்கப்பு ஏவுகணையை மீறி இது வரை எதிரி நாட்டு ஏவுகணை உள்ளே நுழைய முடியவில்லை என்பதே உண்மை.

ஆகாஷ் ஏவுகணைத் தயாரித்த இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினர் (DRDO) அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியுடன் சிரம் தாழ்ந்த வணக்கம்.

**பத்திரிக்கை செய்திகள்**

## ஏன் வேண்டும் பழைய ஓய்வூதியத் திட்டம்?

மத்திய அரசின் ஒருங்கிணைந்த பென்ஷன் திட்டம் UPS பங்குச் சந்தை அடிப்படையிலானது, மிகவும் ஆபத்தானது என்பதை விளக்கும் இந்து தமிழ் திசை கட்டுரை.

பழைய ஓய்வூதியத் திட்டம் வேண்டும் என்கிற முதன்மைக் கோரிக்கைக்காக தமிழக அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தொடர் போராட்டத்தில் குதித்துள்ளனர். திமுக அறிவித்த தேர்தல் வாக்குறுதி எண் 309இல் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்குப் புதிய ஓய்வுதியம் கைவிடப்பட்டு, பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பழைய ஓய்வூதியம் கொண்டுவரப் பரிசீலிக்கப்படும் என்றோ கமிட்டி அமைக்கப்படும் என்றோ அதில் சொல்லவில்லை. திமுக அரசு ஏன் இவ்வளவு தடுமாறுகிறது எனத் தெரியவில்லை.

**சாத்தியம் உண்டு**

உண்மையில், பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதில் தமிழக அரசுக்குப் பெரிய சிரமம் ஒன்றும் இல்லை. இப்போது பணியில் இருக்கும் தமிழக அரசு ஊழியர், ஆசிரியர்களில் 2.29 லட்சம் பேர் பழைய ஓய்வூதியத் திட்டத்திலும், 6.14 லட்சம் பேர் புதிய ஓய்வூதியத் திட்டத்திலும் உள்ளனர். ஊழியர்களின் தொகை ரூ.73,974 கோடியை ஆயுள் காப்பிட்டு ஓய்வூதிய நிதியில் அரசு சேமித்து வைத்துள்ளது. இதில் பாதித் தொகையான ரூ.37,000 கோடியை அரசு ஓய்வூதிய நிதியமாக வைத்துக்கொண்டு, ஓய்வு பெறுவோரின் ஓய்வூதியச் செலவை அதன் வட்டியிலிருந்து ஈடுகட்டலாம். 7% வட்டி என்றால், ரூ.2,590 கோடி கிடைக்கும். மீதி ரூ.37,000 கோடியை அவரவர் வருங்கால வைப்பு நிதியில் செலுத்த வேண்டும்.

இன்றைய நிலவரப்படி, ஏற்கெனவே ஓய்வு பெற்றுப் பழைய ஓய்வூதியம் பெறுவோர் 6.97 லட்சம் பேர். இவர்களுக்கான ஓய்வூதியச் செலவு 2024–25இல் ரூ.37,663 கோடி. இது அரசின் மொத்தச் செலவான ரூ.3.48 லட்சம் கோடியில் 10 சதவீதம்தான். புதிய ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளவர்களில் 7,738 பேர் 2023–24இல் ஓய்வுபெற்றுவிட்டனர். சராசரியாக 8,000 பேர் ஓய்வு பெறுவர் என்றால், பழைய ஓய்வூதியதாரர்களில் இது ஒரு சதவீதம்தான். ஓய்வூதியச் செலவான ரூ.37,763 கோடியிலும் இது ஒரு சதவீதம்தான். அதாவது ரூ.376 கோடிதான் கூடுதல் செலவாகும். இதனை அரசு கையிலிருக்கும் நிதிய வட்டியான ரூ.2,590 கோடியிலிருந்து ஈடுகட்டலாம்.

ஆனால், அதைச் செய்யாமல் பழைய ஓய்வூதியத் திட்டம், மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகியவை குறித்து ஆராய்வதற்குக் குழு அமைக்கப்படுவதை, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல ஊழியர்கள் உணர்கின்றனர். மேலும், அறிக்கை தர அந்தக் குழுவுக்கு 9 மாதங்கள் அவகாசம் கொடுத்திருப்பதும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

**தமிழக அரசு செய்யும் தவறு**

மத்திய அரசு ஊழியர்களுக்கு இருக்கும் புதிய ஓய்வூதியத் திட்டத்தையும் தமிழக அரசு நடைமுறைப்படுத்தவில்லை. மத்திய அரசு ஊழியர் மறைந்தால், அவரது குடும்பத்துக்குப் பழைய ஓய்வூதிய விதிகளில் உள்ள குடும்ப ஓய்வூதியமும், இறப்புப் பணிக் கொடையும் வழங்கப்படுகின்றன. ஊனமுற்று விருப்ப ஓய்வில் சென்றால் பழைய ஓய்வூதிய விதிகளில், ‘‘இன்வேலிட்’’ ஓய்வூதியமும் பணிக் கொடையும் கிடைக்கின்றன. ஓய்வுபெறுபவருக்குப் பணிக்கொடையும் 'ஆனுவிட்டி' (ஆண்டுத் தொகை) வடிவில் மாதந்தோறும் உத்தரவாதம் இல்லாவிட்டாலும் ஓர் ஓய்வூதியம் கிடைக்கிறது. அரசுப் பங்களிப்பு 14% கிடைக்கிறது. ஓய்வுபெற்றால் 60% எடுத்துக்கொள்ளலாம். 40% ஆனுவிட்டியில் போட்டு, இறந்தபின் அந்த 40% குடும்பத்துக்குத் திரும்பக் கிடைக்கும். தமிழக அரசு இதில் எதையும் செய்யாமல் மொத்தத் தொகையையும் கொடுத்து அனுப்புகிறது.

கடந்த 2024 மே மாதம் வரை ஓய்வு, இறப்பு ஆகிய காரணங்களால் 38,129 பேர் பணியில் இல்லை. மாதந்தோறும் ஒரு தொகை கிடைக்காதபோது, அதைப் பங்களிப்பு ஓய்வூதியம் என்று சொல்வதில் அர்த்தமில்லை. பணிக்கொடைச் சட்டப்படி அனைவருக்கும் பணிக்கொடை தந்தாக வேண்டும்.

**பழைய ஓய்வூதியப் பலன்கள்**

ஆனாலும் புதிய ஓய்வூதியம் பழைய ஓய்வூதியத்துக்கு ஈடாகாது. பழைய திட்டத்தில் 10

ஆண்டுகள் பணிக்கு மத்திய அரசிலும், 30 ஆண்டுகள் பணிக்கு மாநிலத்திலும் 50% சம்பளம் உத்தரவாத ஓய்வூதியமாகக் கிடைக்கிறது. கம்யூட்டேஷன், குடும்ப ஓய்வூதியமும் கிடைக்கிறது. குறைந்தபட்ச ஓய்வூதியமாக மத்திய அரசில் ரூ.9,000, மாநிலத்தில் ரூ.7,850 கிடைக்கிறது. 80 வயதுக்கு மேல் 100 வயதுவரை கிடைக்கும் கூடுதல் ஓய்வூதியம், ஊதியக் குழு வரும்போது ஓய்வூதிய உயர்வு அகவிலைப்படி போன்றவை பழைய ஓய்வூதியத் திட்டத்தில் இருப்பவை, புதிய திட்டத்தில் இல்லை.

இதற்காக நடத்தப்பட்ட பலகட்டப் போராட்டங்களுக்குப் பிறகு உத்தரவாதமான 50% ஓய்வூதியம்; அதில் 60% குடும்ப ஓய்வூதியம்; குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.10,000 அகவிலைப்படியும் உண்டு எனக் கூறி ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்தது. அது ஓய்வூதிய முறையின் நோக்கத்தையே கேள்விக்கு உள்ளாக்குகிறது. ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில், ஊழியரின் 10 சதவீதத்தோடு அரசும் 10% தரும். இரண்டும் சேர்ந்து 'தனிநபர் கார்பஸ் ஆகும். அரசு போடும் 8.5% 'பூல் கார்பஸ்' எனப்படும். தனிநபர் கார்பஸ் சந்தையில் முதலீடு செய்யப்படும். இந்த முதலீட்டுத் தொகைக்கு உத்தரவாதமில்லை.

ஓய்வு பெறும்போது ஊழியரின் தனிநபர் கார்பஸ் முழுமையாக இருக்க வேண்டும். நடுவில் பணம் எடுக்காமல், ஒழுங்கான நேரத்தில் கட்டி, சந்தை நிலையாக இருந்தால் உங்கள் கார்பஸ் என்னவாக இருக்குமோ அதற்கு 'பெஞ்ச்மார்க் கார்பஸ்' என்று பெயர். இதனை பி.எஃப்.ஆர்.டி.ஏ.தான் தீர்மானிக்கும். அதற்கு ஒரு வரையறையும் இல்லை என்பது கவளிக்கத்தக்கது.

**<u>ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் பலன்கள்:</u>**

ஓய்வு பெறும்போது பணிக் காலம் 25 ஆண்டுகள் இருந்தால், நேராக 12 மாத சராசரி சம்பளத்தின் 50% ஓய்வூதியமாகக் கிடைக்காது. தனிநபர் கார்பஸ், பெஞ்ச் மார்க் கார்பஸுக்கு குறையாமல் இருக்க வேண்டும். தனிநபர் கார்பஸ் முழுவதையும் அரசின் பூல் கார்பஸுக்குத் தாரை வார்க்க வேண்டும். அது திரும்பக் கிடைக்காது. அப்போதுதான் 50% ஓய்வூதியம் கிடைக்கும். தனிநபர் கார்பஸ் குறைந்தால் அதே விகிதத்தில் ஓய்வூதியமும் குறையும். தனிநபர் கார்பஸ் சந்தையில் வீழ்த்துவிட்டால் உங்கள் ஓய்வூதியமும் வீழ்ந்துவிடும் அபாயம் உண்டு.

ஓய்வு பெறும்போது பணிக்காலம் 10 ஆண்டுகள் என்றால் சம்பளத்தில் 20% தான் ஓய்வூதியமாகக் கிடைக்கும். குறைந்தபட் ஓய்வூதியம் ரூ.10,000 என்பது தனிநபர் கார்பஸ், பெஞ்சிமார்க் கார்பஸுக்குக் குறையாமல் இருந்தால்தான் கிடைக்கும். தனிநபர் கார்பஸ் குறைந்தால், குறைந்தபட்ச ஓய்வூதியமான 10,000 கிடைக்காது. தனிநபர் கார்பஸிலிருந்து 60% எடுத்துக்கொள்ளலாம். ஆனால், உங்கள் ஓய்வூதியம் 60% குறைந்து விடும். அதாவது, ஓய்வூதியம் ரூ.10,000 என்றால் அதில் 60% குறைந்து, ரூ.4,000தான் ஓய்வூதியமாகக் கிடைக்கும். அதேபோல் குடும்ப ஓய்வூதியம் 60% என்ற கணக்கின்படி ஓய்வூதியம் ரூ.4,000 என்றால், அதில் 60% ரூ.2,400 தான் கிடைக்கும். குடும்ப ஓய்வூதியத்துக்குக் குறைந்தபட்சம் ரூ.10,000 என்கிற உத்தரவாதம் கிடையாது. எனவேதான், மத்திய அரசு இதனை ஓய்வூதியம் என்று குறிப்பிடாமல் 'பே அவுட்" என்கிறது.

**<u>விருப்ப ஓய்வு</u>**

விருப்ப ஓய்வு விவகாரத்தில் விநோதமான விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, 21 வயதில் பணிக்கு வரும் ஒருவர் 25 ஆண்டுகள் பணி செய்திருந்தால்தான், விருப்ப ஓய்வில் செல்ல முடியும். இதன்படி, அவர் தனது 46 வயதில் விருப்ப ஓய்வில் சென்றால், அவருக்கு எப்போது ஓய்வு வயது 60 ஆகிறதோ அப்போதுதான், அதாவது, 14 ஆண்டுகள் கழித்துதான் 'பே அவுட் கிடைக்கும். இப்படி ஒரு விநோத விதிமுறை ஊழியர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு அறிவிக்கப்படும் அதே சதவீதத்தில் அகவிலைப்படி கிடைக்காது. 01.04.2025–க்குப் பின் பூஜ்ஜியத்திலிருந்து தொடங்குவார்கள். அகவிலைப்படியை மத்திய ஆவணப் பாதுகாப்பு முகமைதான் அறிவிக்கும் (Central Record Keeping Agency), மத்திய அரசல்ல!

பழைய ஓய்வூதியத் திட்டத்தில் இருப்பதில் என்னவெல்லாம் புதிய ஓய்வூதியத்தில் இல்லை என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோமோ அவை எதுவும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திலும் கிடையாது. எனவேதான் மாநில அரசு ஊழியர்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தைத் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள், அரசு இதில் உரிய முடிவை எடுக்க வேண்டும்!

– நன்றி, இந்து தமிழ் திசை

## தனியாரிடம் மின் நிலைய பராமரிப்பு தொழிற்சங்கங்கள் எதிர்ப்பால் நிறுத்தம்

சென்னை, மார்ச் 18– தொழிற்சங்கங்கள் எதிர்ப்பால், துணை மின் நிலையங்களின் பராமரிப்பு பணிகளை, தனியாருக்கு விடுவதற்கான உத்தரவை மின் வாரியம் நிறுத்தி வைத்துள்ளது.

அனல் மற்றும் புனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை, பல்வேறு திறன்களில் உள்ள துணை மின் நிலையங்களுக்கு எடுத்துச் சென்று, உயரழுத்தம் குறைக்கப்படுகிறது. பின், 'பீடர்' எனப்படும், மின் வழித்தடங்களில் மின்சாரம் அனுப்பப்பட்டு, மின் சாதனங்கள் உதவியுடன் வினியோகம் செய்யப்படுகிறது. துணை மின் நிலையங்களின் பராமரிப்பு பணிகளை, வாரிய பணியாளர்களே மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில், 765, 400, 230 கிலோ வோல்ட் திறன் உடைய துணை மின் நிலையங்களின் பராமரிப்பு பணிகளை, இரு ஆண்டுகளுக்கு தனியாருக்கு வழங்க மின் வாரியம், கடந்த, 12ம் தேதி உத்தரவிட்டது.

இதற்கு பணியாளர்களிடம் எதிர்ப்பு எழுந்தது. இந்த உத்தரவை திரும்பபெறுமாறு. சென்னை வாரிய தலைமை மின் அலுவலகத்தில், அதன் தலைவர் ராதாகிருஷ்ணனை சந்தித்து, தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு நிர்வாகிகள் நேற்று வலியுறுத்தினர்.

இதுகுறித்து, மின் வாரிய தொழிலாளர், தொழிற்சங்க நிர்வாகிகள் கூறுகையில், "துணை மின் நிலையங்கள் பராமரிப்பை, அவுட்சோர்சிங் முறையில் விடும்பட்சத்தில், ஒப்பந்த நிறுவனம் அதிக ஊழியர்களை நியமிப்பதாக தெரிவித்து, குறைந்த ஊழியர்களை நியமிக்கும். ‘‘அதிகம் பேருக்கு சம்பளத்தை வாங்கும். இதுபோல பல பாதிப்புகள் உள்ளன; இந்த பாதிப்புகள் குறித்து, வாரிய தலைவரிடம் கூட்டுக்குழு சார்பில் விரிவாக எடுத்து கூறப்பட்டது. அதிலுள்ள நியாயங்களை உணர்ந்து கொண்ட அவர், உத்தரவை நிறுத்தி வைக்கும்படி அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்," என்றார்.

## ஸ்பெயின் மின்வெட்டு!!!

மாட்ரிட், ஏப்.30–

ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின், போர்ச்சுக்கலில் ஏப்ரல் 28–ல் வரலாறு காணாத அளவுக்கு மின் தடை ஏற்பட்டது. ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் நகரம் முழுதும் இருளில் மூழ்கியது.

பெரும்பாலான நகரங்களில் மின் தடை ஏற்பட்டது. இதனால், விமானம் மற்றும் ரயில் சேவை, மெட்ரோ ரயில் சேவை. ஏ.டி.எம்.. சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதேபோல், போர்ச்சுக்கல் தலைநகர் லிஸ்பன் உள்ளிட்ட நகரங்களிலும் மின் தடை ஏற்பட்டது.

இந்நிலையில் ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளில், பெரும்பாலான பகுதிகளில் மீண்டும் மின்சாரம் மீட்டெடுக்கப்பட்டது.

இதனால் மாட்ரிட் நகரத்தில் பள்ளி, கல்லூரிகள், அலுவலகங்கள் திறக்கப்பட்டன. வணிக வளாகங்கள், கடைகள். சந்தைகள் திறக்கப்பட்டு இயல்பு நிலை திரும்பியது.

இதே போல், போர்ச்சுக்கலிலும், 99 சதவீதம் மின் தடை மீட்டெடுக்கப்பட்டு இயல்பு நிலை திரும்பியது. சைபர் தாக்குதலால் மின் தடை ஏற்பட்டதற்கான ஆதாரம் இல்லை என்றும் ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் பிரதமர்கள் கூறினர்.

ஸ்பெயினின் மின் விநியோக நிறுவனமான ரெட் எலக்ட்ரிகா, ஐந்து வினாடிகளில் 15கிகா வாட் மின்சார இழப்பு ஏற்பட்டதே மின் கட்டமைப்பில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியதாக தெரிவித்துள்ளது.

இதற்கு தொழில்நுட்ப அல்லது தீவிர வெப்பநிலையால் கம்பிகளில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக இருக்கலாம் என கணித்துள்ளது. தெளிவான காரணம் குறித்து அறிய தீவிர விசாரணை நடக்கிறது.

– நன்றி தினமலர்

## இதெல்லாம் சூப்பர் பிளான்! கடலுக்குள் காற்றாலை.. மின் உற்பத்தியில் அடித்து தூக்க போகும் தமிழ்நாடு

சென்னை: வங்க கடலோரம் அமைந்துள்ள தமிழகத்தில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்வதற்கான சாத்தியங்கள் இருப்பது நிபுணர்களால் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில், டென்மார்க் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் கடலுக்குள் காற்றாலை அமைப்பது தொடர்பாக சென்னையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றுள்ளது. குஜராத்திற்கு அடுத்தபடியாக இந்தியாவின் மிக நீளமான கடற்கரையை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. தமிழகத்தின் கடற்கரை சுமார் 1076 கிலோ மீட்டர் ஆகும்.

புவி வெப்பமயமாதலால் உலகின் தட்பவெப்ப நிலை அதிகரித்து வருகிறது. இதனால், பல்வேறு இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. இதன் காரணமாக புவி வெப்ப மயமாதலை கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### கடலில் காற்றாலை

அதன் ஒருபகுதியாக புதுப்பிக்க கூடிய எரிசக்தியை பயன்படுத்த உலக நாடுகள் ஆர்வம் காட்டுகின்றன. அந்த வகையில், உலகம் முழுவதும் பல முன்னேறிய நாடுகளில் கடலில் காற்றாலை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த காற்றாலை மூலமாக மின்சாரம் தயாரிக்கும் போது எந்த மாசும் ஏற்பட போவது இல்லை. அனல் மின் நிலையங்கள், அணு மின் நிலையங்களில் மின் உற்பத்தியை ஒப்பிடும் போது இதில் கார்பன் உமிழ்வு உள்ளிட்டவை கிடையாது.

இதனால், உலகின் பல்வேறு நாடுகளும் இதனை விரும்ப தொடங்கியுள்ளன. இந்த நிலையில்தான் இந்தியாவின் மிக நீளமான கடற்கரை கொண்ட மாநிலங்களில் ஒன்றாக உள்ள தமிழகமும் கடலில் காற்றாலை அமைத்து அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கும் முடிவை கையில் எடுத்துள்ளது. வங்க கடலோரத்தில் அமைந்துள்ள தமிழகத்தில் கடல் காற்று நிலையானதாக இருக்கும். இதனால், நம் நாட்டிலேயே இங்கு தான் கடலில் காற்றாலை அமைக்கும் திட்டம் எளிதாக செயல்படுத்த முடியும் என்பது நிபுணர்களின் வாதமாக உள்ளது.

### டென்மார்க் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

கடலில் காற்றாலை அமைப்பதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளதாம். இதற்காக விரைவில் டென்மார்க் நாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது எனவும் அப்போது முறையான அறிவிப்பு வெளியாகும் எனவும் சொல்லபடுகிறது. கடலில் காற்றாலை அமைப்பதற்கான டெக்னாலஜி என்பது இந்தியாவில் இல்லை. இதனால், டென்மார்க்கில் இருந்து கொண்டு வந்து இந்தியாவில் முதல் முறையாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் தமிழ்நாடு மின்மிகை மாநிலம் ஆவதோடு, புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கும். தென் மாவட்டங்கள் கடலோர பகுதிகள் இதனால், வளர்ச்சி அடையும். கடலில் காற்றாலை அமைத்து, பெரிய ராட்சத குழாய்களை பயன்படுத்தி அதற்குள் வயர்கள் பதித்து மின்சாரத்தை கரைக்கு கொண்டு வரப்படும். இதற்காக புதிய காற்றாலைகளை உருவாக்க வேண்டும். விரைவில் இந்த பணிகள் தொடங்க உள்ளதாக சொல்லப்படுகிறது.

### அதிகாரிகள் ஆலோசனை

இந்த திட்டத்திற்காக டென்மார்க்கில் உள்ள டேனிஷ் எனர்ஜி ஏஜென்சி, டென்மார்க் தூதரகம் மற்றும் தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் இடையே உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நடந்தது. தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இது தொடர்பாக டென்மார்க் அதிகாரிகளுடன் ஆலோசனை நடைபெற்றுள்ளது.

## 'ஷாக்' அடிக்கும் பிரச்னை அல்ல!

கோடைகாலம் தொடங்கிவிட்டாலே மின்சாரத்தின் தேவை அதிகரிப்பது இயல்பு, நடுத்தர வர்க்கத்தினரின் வீடுகளிலும் குளிரூட்டி இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் சலவை இயந்திரங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால் மின் தேவை அதிகரித்துள்ளது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மின் தேவை, தற்போது சுமார் 19,000 மெகாவாட்டை எட்டியுள்ளது. கடந்த ஆண்டில் அதிகபட்ச மின் பயன்பாடு ஏப்ரல் மாதம் 8ஆம் தேதி 20,125 மெகாவாட்டாக இருந்தது. இப்போது கோடைகாலம் தொடங்கியுள்ள நிலையில் மின் தேவை சுமார் 22,000 மெகாவாட்டை எட்டலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. தற்போது அவ்வப்போது பெய்துவரும் மழையால் மின் தேவை சற்று குறைந்திருக்கிறது.

அனல் மின் உற்பத்தி நிறுவுதிறன் 1,959 மெகாவாட் என்ற நிலையில், தற்போது 1,709 மெகாவாட்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. எரிவாயு மின் உற்பத்தி நிறுவு திறன் 1,027 மெகாவாட்டாக இருந்துவரும் நிலையில், தற்போது 524 மெகாவாட்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. காற்றாலை, சூரியசக்தி ஆகிய புதுப்பிக் கத்தக்க மின் உற்பத்தி நிறுவுதிறன் 25,290 மெகாவாட் ஆகும். இவற்றில், காற்றாலைகளிலிருந்து 11,739 மெகாவாட், சூரியசக்தி மூலம் 10,153 மெகாவாட் என மொத்தம் 21,892 மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்யப்படுகிறது.

நீர்மின் நிலையங்கள் மூலம் 2,178 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதையும் சேர்த்துக் கணக்கிட்டால் மொத்தம் 26,303 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாக மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த உற்பத்தி சுமார் 55 சதவீதம் அரசு நிறுவனங்கள் மூலமும், எஞ்சிய 45 சதவீதம் தனியார் நிறுவனங்கள் மூலமும் கிடைக்கிறது. இவை தவிர, மத்திய தொகுப்பு மின்சாரமும், தேவைக் கேற்ப தனியாரிடம் கூடுதல் கொள்முதல் செய்து கொள்ளவும் வழி உண்டு.

அதன்படி பார்த்தால், கோடைகால உச்சபட்ச தேவையைவிட சுமார் 4,000 மெகாவாட் மின்சாரம் உபரியாகத்தான் இருக்கிறது. எனினும், கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் இரவு–பகல் வேறுபாடு இல்லாமல் குறைந்தபட்சம் அரை மணி நேரம் முதல் இரண்டு, மூன்று மணி நேரம் வரை மின் தடை ஏற்படுகிறது. தேவைக்கு அதிகமாகவே மின் உற்பத்தி இருப்பதாக தமிழக மின் வாரியம் கூறினாலும் மின்தடை தொடர்வது வியப்பாக இருக்கிறது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது குறுவை சாகுபடிப் பணிகள் தொடங்கியுள்ளன. மேட்டூர் அணை ஜூன் 12–இல் திறப்பதற்கு முன்பாக கிணற்றுப் பாசன வசதியுள்ள விவசாயிகளுக்கு தடையற்ற மும்முனை மின்சாரம் தேவை. ஆனால், தற்போது 14 மணி நேரம் மும்முனை மின் விநியோகம் இருந்தபோதிலும் இடையிடையே ஏற்படும் மின்தடை வேளாண் பணிகளைப் பாதிக்கச் செய்கிறது. இதர ஆற்றுப் பாசன மற்றும் குளத்துப் பாசன பகுதிகளுக்கும் மும்முனை மின்சாரம் தேவை. உபரி மின் உற்பத்தி இருந்த போதிலும் மின்தடை ஏற்படுகிறது என்றால், அதற்கான காரணத்தைக் கண்டறிந்து தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

இப்போது காணப்படும் மின் தடையை மின்வாரியத்தினர் ஒப்புக் கொள்வதில்லை. மின் உற்பத்திக் குறைவு இருந்து அதனால் மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டால் மட்டுமே அதை மின் தடையாகக் கருத வேண்டும்; இப்போது நிலவுவது மின் விநியோகத்தில் உள்ள பிரச்னைதான் என்பது அவர்களின் வாதம்.

முறையான பராமரிப்புப் பணிகளைச் செய்து கண்காணிப்பை தீவிரப்படுத்தினால் மின்தடை ஏற்படாமல் தடுக்க முடியும். நிதிப் பற்றாக்குறையால் மின் மாற்றிகள், கம்பங்கள், மின்கம்பிகள் உள்ளிட்ட தளவாடப் பொருள்கள் பற்றாக்குறை உள்ளது. காலாவதியானவற்றைப் புதுப்பிக்கவும் வழி இல்லை. பழுதடைந்தவற்றை உடனே மாற்றுவதில் ஏற்படும் சுணக்கம் மின்தடைக்குக் காரணமாகிறது.

மின்வாரியத்தில் நிலவும் நிதிப் பற்றாக்குறையும், நபர் பற்றாக்குறையும் கூட இந்தச் சிக்கலுக்கு காரணம், மின்வாரியத்தின் மொத்த நஷ்டம் ரூ.1.62 லட்சம் கோடி. இதில் சுமார் 75 சதவீதம் இதர அரசு

மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் ஆகும். நாட்டில் உள்ள மின்வாரியங்களின் மொத்த நஷ்டமான ரூ.6.47 லட்சம் கோடியில் தமிழக மின் வாரியத்தின் பங்கு மட்டுமே சுமார் 25 சதவீதம் ஆகும்.

தமிழக மின்வாரியத்தின் கடன் சுமைக்கு முக்கியமான காரணம், அரசு நிறுவனங்களின் உற்பத்தியைக் குறைத்துவிட்டு, ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வகையில் தனியாரிடம் மின்சாரம் கொள்முதல் செய்வதும் என்று கூறப்படுகிறது.

இன்றைய நிலையில், மின்வாரியத்தில் களப்பணியாளர்கள் முதல் தலைமைப் பொறியாளர் வரை சுமார் 1.40 லட்சம் பேர் தேவை. ஆனால், சுமார் 60,000 பணியிடங்கள் காலியாக உள்ளதாக தொழிற்சங்கத்தினர் தொடர்ந்து கூறிவருவதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். உதவிப் பொறியாளர்கள், கம்பியாளர் மற்றும் உதவியாளர், தொழில்நுட்பம் சாராத பணியாளர்கள் என சுமார் 2,000 காலிப் பணியிடங்களைளை நிரப்ப வாரியம் அனுப்பியுள்ள கருத்துருவை அரசு விரைந்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேவைக்கு அதிகமாகவே மின் உற்பத்தி இருந்தும்கூட மின் தடை தொடர்வது எதிர்கொள்ள முடியாத பிரச்சனை அல்ல. நிதிப் பற்றாக்குறைக்கும், நபர் பற்றாக்குறைக்கும் தீர்வு கண்டால் மின் தடைக்கும் தீர்வு காண முடியும்.

– நன்றி தினமணி

## *திருமண வரவேற்பு அழைப்பிதழ்*

மணமகன் வீட்டார்
திரு.N. பொன் கருப்பசாமி (எ) செல்வம்
திருமதி.P. செல்வ மாரியம்மாள்,
தம்பதியரின் புதல்வன்
திருவளர்ச்செல்வன்
**N.P. கோகுல் நாத், M.E., (Strl) AMIE**
**MD-PGN Construction, Vel Mayil Properties**
என்கிற வரனுக்கும்



மணமகள் வீட்டார்
திரு.S. ஜார்ஜ் ஜெய்சிங்,
திருமதி.R. சுனிதா
அவர்களின் புதல்வி திருவளர்ச்செல்வி
**G.S. ஸ்ரேயா, B.E., (CSE)**
என்கிற கன்னிகைக்கும்

திருமண வரவேற்பு, மங்களகரமான 1200–ம் ஆண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் வைகாசி மாதம் 23–ம் தேதி (6–6–2025) வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு மேல் தூத்துக்குடி, அபிராமி A/c மஹாலில் (2–ம் கேட் சமீபம்) வைத்து நடைபெறுவதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள
Er.N. பொன் கருப்பசாமி (எ) செல்வம்,
DEE., MIE., MBA., M.Tech., PGDLA., MLM.,
Executive Engineer/TTPS/TNEB.Ph:8903457033
திருமதி.P. செல்வ மாரியம்மாள் B.Sc., C.G.T.,

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

**மின் அலை வளர்ச்சி நிதியாக பொர். N. பொன் கருப்பசாமி, EE/TTPS/TNEB**
**TTPS கிளை அவர்கள் ரூபாய்.1001/–அளித்துள்ளார், நன்றி**

## வரவேற்கிறோம்



**வேறு அமைப்புகளில் இருந்த பட்டயப் பொறியாளர்கள்**
**நமது கரூர் கிளை பொறியாளர் சங்கத்தில் இணைந்துள்ளனர்.**
**இணைந்த பொறியாளர்களை சங்கம் வாழ்த்தி வரவேற்கிறது.**
**இதற்கு முழு முயற்சி எடுத்த கரூர் கிளை பொறுப்பாளர்களை**
**பொறியாளர் சங்கம் பாராட்டுகிறது.**

## மின்வாரியத்தில் களப்பணியாளர் பற்றாக்குறையால் மன உளைச்சல்; புதிய நியமனம் எப்போது என எதிர்பார்ப்பு

மதுரை : தமிழக மின்வாரியத்தில் அடிப்படை பணிகளை மேற்கொள்ளும் களப்பணியாளர் பற்றாக்குறையால் பராமரிப்பு உட்பட கட்டமைப்புகளை கவனிக்கும் பணிகளில் பாதிப்பு ஏற்படுகிறது.

கோடை துவங்கிய பின் மின்நுகர்வு அதிகரித்துள்ளதால் ஆங்காங்கே அடிக்கடி மின்தடை, மின்வினியோக பாதிப்பு நிகழ்கிறது. அதுபற்றி பொதுமக்கள் புகார் தெரிவித்தாலும் உடனடியாக தீர்வு கிடைப்பதில்லை. இதனால் பொதுமக்கள், அதிகாரிகள் இடையே பிரச்னை ஏற்படுகிறது. இப்பிரச்னைகளுக்கு அடிப்படை காரணம் பணியாளர் பற்றாக்குறையே என்பதே மின்வாரிய ஊழியர்களின் வாதம். இதுகுறித்து விசாரித்தபோது, வாரியத்தில் களப்பணியாளர்கள் பணியிடங்கள் பெருமளவு காலியாக இருப்பதாக வேதனை தெரிவிக்கின்றனர்.

### மின்வாரிய காலியிடங்கள்

மின்வாரிய ஊழியர்கள் கூறியதாவது: இத்துறையில் அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 208. இப்பணியிடங்களில் 80 ஆயிரத்து 874 பணியிடங்களில்தான் ஆட்கள் உள்ளனர். மீதியுள்ள 61,334 பணியிடங்கள் காலியாகவே உள்ளன. இவர்களிலும் ஒயர் மேன் 11 ஆயிரத்து 70, ஹெல்பர் 3239, ஒயர்மேன்/ஹெல்பர் 858, வணிக உதவியாளர் 2499 பணியிடங்களில் ஆட்கள் உள்ளனர். இவை தவிர மொத்தமாக 38 ஆயிரத்து 970 பணியிடங்கள் காலியாகவே உள்ளன.

இதனால் மின்வாரியத்தில் குழிதோண்டுவது, மின்கம்பம் நடுதல், மின்னிணைப்பு வழங்கல், விரிவாக்கப்பகுதிக்கு மின்பாதை அமைத்தல், பராமரிப்பு உட்பட அடிப்படை பணிகளுக்கு ஆட்களே இல்லை. ஒரு அலுவலகத்தில் 7 ஒயர்மேன், 7 ஹெல்பர்கள் இருக்க வேண்டும். ஆனால் ஒயர்மேன் ஒருவர்கூட இல்லை. கேங்மேன்கள் 2 பேர்தான் உள்ளனர். இதனால் மின்தடை புகார்களை உடனே கவனிக்க முடியவில்லை.

### மனஉளைச்சலில் பணியாளர்

இதனால் கேங்மேன்களே சமாளிக்கின்றனர். இவர்கள் அதற்கான பயிற்சி பெற்றவர்கள் அல்ல. களப்பணியாளர் இல்லாத நிலையில் பணிப்பளுவால், பலரும் மனஉளைச்சலுடன் உள்ளனர். இதுதவிர மின்வாரியத்தில் புது இணைப்புக்கு மின்மீட்டர்கள் வழங்குவதிலும் ஒரு மாதத்திற்கு மேலாக காத்திருக்க வேண்டி உள்ளது. வாரியத்தலைவர் உத்தரவிட்டும், அயற்பணியாக வேறு அலுவலகங்களுக்கு பணியாளரை அனுப்புவது தொடர்கிறது. பல ஆண்டுகளாக பணியாளர் நியமனம் இல்லாததால் பணிப்பளு தொடர்கிறது. அ.தி.மு.க., ஆட்சியின்போது 10 ஆயிரம் கேங்மேன்களை நியமித்தனர்.

அதன்பின் காலியிடங்கள் அதிகரிப்பால் புதிய நியமனம் எப்போது நடக்குமோ என ஊழியர்கள் எதிர்பார்க்கின்றனர்.

– நன்றி தினமலர் மதுரை


## பக்ரீத் நல்வாழ்த்துக்கள்

பொறியாளர் சங்க உறுப்பினர்கள்
அனைவருக்கும் பக்ரீத் தின
நல்வாழ்த்துக்களை
பொறியாளர் சங்கம்
தெரிவித்துக்கொள்கிறது.



## மின்துறையில் செயற்கை நுண்ணறிவு:

இந்திய மின்துறை ஒரு பெரிய மாற்றத்துக்கு உள்ளாக இருக்கிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் மூலமாக 500GW உற்பத்தி திறனை 2030 ஆண்டுக்குள் உருவாக்கிட குறியீடு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. தொழிற்துறை வளர்ச்சி, மின்சார வாகனங்கள், புள்ளி விபர மையங்கள் (DATA CENTRE EXPANSION) விரிவாக்கம் ஆகிய காரணங்களால் தடையில்லாத தரமான மின்சக்தியை அளிக்க வேண்டியது அவசியமாகிறது.

புதுப்பிக்கத்தக்க வளங்கள் மூலம் கிடைக்கும் மின்சக்தியை முழுவதுமாக பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்தச் சூழலில் செயற்கை நுண்ணறிவு, மின் கட்டமைப்பு நிலைத்தன்மையை பேணுதல். தடையில்லாத மின்சக்தியை அளிப்பது ஆகியவற்றில் பெரும் பணி ஆற்றவுள்ளது.

சூரியஒளி, காற்றாலை மாற்றத்துக்கு ஏற்ப மின் உற்பத்தி செய்யப்படும். அதே போன்று மின் தேவையும், மாறிக் கொண்டே இருக்கும் தடங்களுடன் கூடிய மின்சக்தி, மாறிக் கொண்டிருக்கும் மின்சக்தி, மின்தேவை இவைகளை முன்னதாகவே செயற்கை நுண்ணறிவு மூலம் கண்டறிந்து செயல்படும்.

"BRIGHT NIGHT'S POWER ALPHA என்ற மென்பொருள் இந்த செயல்களை முன்னதாகவே கண்டறிய பயன்படுத்தப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு மென்பொருள் காலநிலை குறித்த புள்ளி விபரங்கள், செயற்கைகோள் புகைப்படங்கள், வழக்கமான பருவநிலை மாறுதல் ஆகியவற்றை பயன்படுத்தி சூரியஒளி நேரங்கள், காற்றின் வேகம், மின்தேவை ஆகியவை குறித்து துல்லியமாக தகவல் அளிக்கின்றன. இந்தத் தகவல்களால் ஒருங்கிணைந்த மின் உற்பத்தி திட்டமிடல், மின்சக்தி வழங்குவது போன்றவை சாத்தியமாகின்றன.

புதுப்பிக்கத்தக்க வளங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை, நாள் முழுவதும் தடையில்லாமல் விநியோகம் செய்ய செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது. மின்சக்தியின் விலை, மின்தேவை, காலநிலை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து மின் உற்பத்தி அளவு முறைகளை தெரிவிக்கிறது.

சூரியஒளி, காற்றாலை மின்சக்தி, மின்கலத்தில் சேமிக்கப்பட்ட மின்சக்தி ஆகியவற்றை பயன்படுத்தும் நேரங்களையும் வடிவமைக்கிறது. செயற்கை நுண்ணறிவு மென் பொருட்கள் மின்கலங்களுக்கு மின்சக்தியை செலுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் (CHARGING AND DISCHARGING) ஆகியவற்றை திறம்பட செய்ய உதவுகின்றன.

காற்றாலை சூழலிகள், சூரியஒளி மின்சக்தி பேனல்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் SENSOR SIGNAL களை ஆய்வு செய்து, அவைகளில் வரவிருக்கின்ற பழுது ஆகியவற்றை முன்னதாகவே கண்டறிய முடியும். தொலை தூரங்களில் அமைக்கப்பட்டுள்ள மின் நிலையங்கள் பராமரிப்பிற்கு செயற்கை நுண்ணறிவு மென்பொருட்கள் பெரிதும் பயன்படும். புதியதாக காற்றாலை, சூரியஒளி மின்உற்பத்தி நிலையங்கள் அமைக்க பொருத்தமான இடங்களை தேர்வு செய்யவும் செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது.

BRIGHT NIGHT மென் பொருட்கள் நிலத்தின் தன்மை, காலநிலை விபரங்கள், அந்த இடத்திற்கு கட்டமைப்பு இணைப்புக்கான வாய்ப்பு ஆகிய அனைத்து விபரங்களையும் ஆய்வு செய்து, பொருத்தமான இடத்தை தேர்வு செய்கின்றன. மின் சந்தைகளில் நடைமுறையில் உள்ள மின் சக்தியின் விலை எதிர்பார்க்கப்படும் விலை, கட்டமைப்பின் நிலை ஆகியவற்றை முன்னதாக அறிந்து அதற்கேற்ப திட்டமிட செயற்கை நுண்ணறிவு மென் பொருட்கள் உதவுகின்றன.

மின்சக்தியை அதிகம் பயன்படுத்தும் DATA CENTER–கள் சுமார் 10,000 வீடுகள் பயன்படுத்தும் மின்சக்தியை பயன்படுத்துகின்றன. கணினிமயம், போக்குவரத்து, நகரமயமாகுதல் ஆகிய காரணங்களால் மின்சக்தி பயன்பாடு அதிகரித்து வருகிறது. இவற்றை நிர்வகிக்க எளிமையான, தற்சார்புடைய, தொழில்நுட்ப அறிவு மிக்க ஒரு அமைப்பு தேவை. செயற்கை நுண்ணறிவு உதவியும் புதுப்பிக்கத்தக்க வளங்களின் மின்சக்தியும் இதை நிறைவு செய்யும்.

செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டின் மூலம், ஸ்மார்ட் மீட்டர்கள் வாயிலாக மின் பயன்பாட்டை குறைக்கலாம் இதனால் நிதி சேமிப்பும், கட்டமைப்பில் பளுவும் குறையும். செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம், Machine Learning, Industrial Internet Of Things, Artificial Learning, Drone Based Initiatives ஆகியவையும் இணைத்து பயன்படுத்துப்படுகின்றன. தொலை தூரங்களிலிருக்கும் மின் நிலையங்களைக்கூட நிர்வகிக்க முடிகிறது.

– பொர்.சா. கண்ணன் / மு.து.தலைவர்

# பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 30.04.2025 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. **Er. C.SUBRAMANI,** JE I / Enforcement / Dindigul /GCM Dindigul Branch. 9486257922
2. **Er. K.RAJENDIRAN,** AEE/Town/Ariyalur, Vice Pres./ Perambalur Branch. 9751347700
3. **Er. C.A.RAMAN,** EE / O&E / MTPS I, President / MTPS Branch. 9952361520
4. **Er.G.MANIMARAN,** AEE/Shift/400KV/Alamathi SS, Former BS/Dharmapuri, Chennai West Branch. 94430 82290
5. **Er. G.SURESH,** AEE/Town/Orathanadu, Former Treasurer/ Thanjavur Branch. 6381692615..
6. **Er.K.RAVICHANDRAN**, EE /Elec./O/oCE/D, Thanjavur, Former Org. Secy./Pudukkottai, Thanjavur Branch. 7904180732.
7. **Er. P.VIJAYARAJ,** JE I/O&M / Papanasam LC DS / Kallidaikurichi, Tirunelveli Br. 94435 82809
8. **Er. K.BASKARAN,** JE I/Mtce./230 KV SS/Echoor, DS/Operation, T.v.malai Branch. 9500838885
9. **Er. M.RAMAKRISHNAN**, EE/Operation/230 KV Kavanoor SS, Ramnad Branch. 98429 81916
10. **Er. K.REJITHKUMAR**, AEE/Mtce./BPH I/Chekkanoor, Erode Gen. Circle, Mettur Br.94880 28064
11. **Er. B.RAVICHANDRAN,** AEE/Shift/400 KV/Alamathi SS, Chennai West Branch. 99526 85290
12. **Er. S.DURAIRAJ,** AEE / 110 / 22KV Grid SS / Sivaganga, Sivaganga Branch. 9789463510
13. **Er. A.MAHENDRAN,** AEE / SPL / Nattaradankottai, Sivaganga Branch. 8038074352
14. **Er. G.RAJENDERAN**, AEE / MRT Protection, Virudhunagar Branch. 8110024232
15. **Er. A.SHANMUGAM,** AEE / O&M / Elumathur, Erode Branch. 9578323163
16. **Er. R.S.RAJESH SEKERAN**, AEE / O / 110KV SS Puliyur, Karur Branch. 9688833000
17. **Er. S.RADHAKRISHNAN,** AEE / Scada Control Centre / CDC, CDC Branch. 9884815398
18. **Er. R.MOHAN,** AEE / Scada Control Centre / CDC, CDC Branch. 9444100455
19. **Er. N.JAYAVEL,** AEE / Schemes / CDC, CDC Branch. 97911 28707
20. **Er. R.GANESAN**, AEE / O&M / Vyasarpadi, Chennai North Branch. 9003226290
21. **Er. T.VENKATESAN,** AEE / Shift / 230 KV SS / Villupuram, Villupuram Branch. 7904495739
22. **Er. M.VASUDEVAN,** AEE / Genl. / C.Off. / Kanchi, Kanchipuram Branch. 95856 67318
23. **Er. K.MOORTHY**, AE / O&M / Kizh Arasambut, Vellore Branch. 9443803060
24. **Er. S.ELANGOVAN,** JE I / Town Batlagundu, Dindigul Branch. 9422269389
25. **Er. C.VISVALINGAM,** JE I/Mtce. /110KV SS Madurapakam, Villupuram Branch. 9842248491
26. **Er..S.NAGARAJAN,** JE I / O&M / MKB Nagar, Chennai North Branch. 9840191325
27. **Er. G.RAVICHANDRAN,** JE I/O&M/Gummidipoondi Town, Chennai North Br. 8667800315
28. **Er. S.MANOKAR,** JE I / Shift / Servalar PH, Tirunelveli Branch. 9488675460
29. **Er. A.SELVAM,** JE I / O&M / Mallavadi, Thiruvannamalai Branch. 9442731686
30. **Er. M.K.VIJAYAKUMAR,** JE II / 110 KV Aduthurai SS, Thanjavur Branch. 9245556906

***VOLUNTARY RETIREMENT***

1. **Er. S.SURESH,** EE / RDSS / IT / Chennai HQ, HQ Branch. 9443185432 (As on 30.04.2025)
2. **Er. A.KARUVELDURAI,** JE I / E / CAD, TTPS Branch. 8925560397 (As on 30.04.2025)

## நாமக்கல்

**நாமக்கல்** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **26.04.2025** அன்று **பொர்.M.வெங்கடாச்சலம்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது**. பொர்.A.அந்தோணி படோவராஜ்,** மாநிலத் தலைவர் அவர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்**.**

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. M.Venkatachalam,** AEE / O&M /Town Rasipuram. 9715947777 |
| துணைத் தலைவர் | : | **Er. M.Marimuthu,** AEE / Mtce. /230 KV SS / Pudanchandai. 8870002280 |
| செயலாளர் | : | **Er. K.Anandababu,** AEE/O&M / Town Namakkal. 9750923023 |
| இணைச் செயலாளர் | : | **Er. R.Sasikumar,** JE2/O/Uppupalayam 110 KV SS. 8072710233 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. K.Mohanraj,** JE2 /110KV SS / Unjanai. 9843095209 |
| பொருளாளர் | : | **Er. S.Sathishkumar,** JE / O&M / Rural West Namakkal..9894812503 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er. C.Raja,** AEE / O&M / Kabilarmalai, 9443209480 |

## தருமபுரி

**தருமபுரி** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **26.04.2025** அன்று **பொர்.K.V.இளையராஜா ,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது**. பொர்.V.S.சம்பத்குமார்,** பொதுச் செயலாளர், **பொர்.C**.**சந்திரசேகரன்,** திருவண்ணாமலை மண்டலச் செயலாளர், **பொர்.V.அசோக்குமார்,** நிர்வாகச் செயலாளர் மற்றும் **பொர்.A.P.ராகேஷ்,** காமதேனு நலநிதி பொருளாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்**.**

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. KV.Ilayaraja,** AE / O&M / Town Harur, Ph. 8667604108 |
| துணைத் தலைவர் | : | **Er. P.Pasupathy,** AE / O&M / Lakkiyampatty, Ph. 9487655395 |
| செயலாளர் | : | **Er. P.Murali,** JE/ O&M / Dharmapuri West, Ph. 97862 20290 |
| இணைச் செயலாளர் | : | **Er. K.Sivakumar,** AE /Shift / 110 KV Grid SS Vellichanthai, Ph. 9976757554 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. M.Sridharan,** JE /O&M / Nallampalli, Ph. 8903527319 |
| பொருளாளர் | : | **Er. P.Arunagiri,** AE / O&M / Indur, Ph. 99446 13753 |

## கரூர்

**கரூர்** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **27.04.2025** அன்று **பொர்.M.முருகன்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது**. பொர்.A.அந்தோணி படோவராஜ்,** மாநிலத் தலைவர் மற்றும் **பொர்.K.ஆனந்தபாபு,** கரூர் மண்டலச் செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்**.**

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. M.Murugan,** JE / Urban / North Karur, Ph. 9976094981 |
| துணைத் தலைவர் | : | **Er. A.Ramakrishnan,** AE / O&M / Rayanur, Ph. 8883184583 |
| செயலாளர் | : | **Er. G.Gopi,** JE / Urban / South Karur, Ph. 9942024610 |
| இணைச் செயலாளர் | : | **Er. R.Senthil Kumar,** JE / O&M / Gandhigram, Ph. 9442816398 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. M.Muthuselvakumar,** JE / O&M / Malaikovilur, Ph. 6383421640 |
| பொருளாளர் | : | **Er. K.Prabakaran,** JE / O&M / Karur, Ph. 9789539772 |

## மதுரை

**மதுரை** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **01.05.2025** அன்று **பொர்.R.கதிர்காமச் செல்வம்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.V.S.சம்பத்குமார்,** பொதுச் செயலாளர், மற்றும் **பொர்.J.கோபாலகிருஷ்ணன்,** செயலாளர்/சட்டம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. R.Kathirkamaselvam,** AEE/S/230KV Alagarkoil SS. Ph. 9677948617 |
| துணைத் தலைவர் | : | **Er. I.Samuel Christopher Dhanaraj,** SM/Tr. Ins. / Madurai, Ph. 9443668025 |
| செயலாளர் | : | **Er. G.Kathirvel,** AEE / O&M / Airport, Madurai, Ph. 7639206686 |
| இணைச் செயலாளர் | : | **Er. P.Baskar,** AE/GIS/METRO, Ph. 9942116083 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. M.Prabhakaran,** JE/Rural/Anuppanady, Ph. 7397013013 |
| பொருளாளர் | : | **Er. P.Suresh,** AE / O&M / Karuppaurani, Ph. 8220953323 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er. J.Gopalakrishnan,** JE/ O&M / Koodal Nagar, Ph. 9865058893. |

## MTPS

**MTPS** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் 04.05.2025 அன்று **பொர்.C.A.ராமன்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.V.S.சம்பத்குமார்,** பொதுச் செயலாளர், **பொர்.R.சுந்தர்ராஜ்,** துணைத் தலைவர்/ மின்னியல், **பொர்.A.குமரேசன்,** ஈரோடு மண்டலச் செயலாளர், **பொர்.J.கோபாலகிருஷ்ணன்,** செயலாளர்/சட்டம், **பொர்.C.நரசிம்மன்,** திருச்சி மண்டலச் செயலாளர், **பொர்.K.சுரேஷ்,** புனல் உற்பத்தி மண்டலச் செயலாளர் மற்றும் **பொர்.T.சுகுமார்,** அனல் உற்பத்தி மண்டலச் செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. N.Venkidusamy,** EE / Generation /MTPS1, Ph. 82484 85712 |
| துணைத் தலைவர் | : | **Er. S.Sivakumar,** AEE / EM1 / MTPS1, Ph. 94439 31022 |
| செயலாளர் | : | **Er. A.Antony Padovaraj,** AEE / C&I / MTPS2, Ph. 9443872166 |
| இணைச் செயலாளர் | : | **Er. P.Mahesh Kumar,** TA / M / O&E / MTPS1, Ph. 81228 16436 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. K.Manikandan,** JE1 / O&E / MTPS2, Ph. 94893 27002 |
| பொருளாளர் | : | **Er. P.Rajeshkanna,** JE1 / CHP2 / MTPS1, Ph. 9443376035 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er. M.Venkatakarthikeyan,** JE1 / TS / MTPS1, Ph. 9894555453 |
| | | **Er. T.Vijayaraghavan,** JE1 / O&E / MTPS1, Ph. 8248682743 |

## மணந்தனர் வாழ்த்துகிறோம்

**மணமகள்**

திரு.**G.** பிரபாகரன், AEE/230KV Athipet SS
திருமதி.D. காஞ்சனமாலா
தம்பதியரின் இளைய குமாரத்தி
சௌபாக்கியவதி
**P. சுப்ரியா, M.Sc., M.Phil.,**



**மணமகன்**

திரு.**D.** லோகநாதன்,
தெய்வத்திருமதி.L. சாந்தி
அவர்களின் சீமந்த புத்திரன், சிரஞ்சீவி
**L. மகேஷ் குமார், M.Tech**
Deputy Manager,
Corporation Technology Center, TI India.

**இருவரும் 11.05.2025 அன்று இல்லற வாழ்வில் இணைந்தனர்**
**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

மின் அலை வளர்ச்சி நிதியாக பொர்.**G.** பிரபாகரன், AEE/230KV Athipet SS
சென்னை வடக்கு கிளை அவர்கள் ரூபாய்.1001/-அளித்துள்ளார், நன்றி

## திண்டுக்கல்

**திண்டுக்கல்** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **10.05.2025** அன்று **பொர்.R.சரவணன்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.A.அந்தோணி படோவராஜ்,** மாநிலத் தலைவர், **பொர்.V.S.சம்பத்குமார்,** பொதுச் செயலாளர், **பொர்.N.R.செந்தில்,** மாநிலப் பொருளாளர், **பொர்.C.நரசிம்மன்,** திருச்சி மண்டலச் செயலாளர், **பொர்.G.கதிர்வேல்,** மதுரை மண்டலச் செயலாளர் மற்றும் **பொர்.J.கோபாலகிருஷ்ணன்,** செயலாளர்/சட்டம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. R.Saravanan,** JE / Shift / Kovilur SS, Ph. 9894328849 |
| துணைத் தலைவர் | : | **Er. G.Chellakamatchi,** AE / O&M / Ayyampalayam, Ph. 9952823733 |
| செயலாளர் | : | **Er. M.John Britto,** JE / O&M / Rural East Dindigul, Ph. 9842341341 |
| இணைச் செயலாளர் | : | **Er.F.Vincent Wilfred,** JE Gr II/110/22 KV Keelakottai SS, Ph. 9894214298 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. M.Abdul Rahman,** AE / MM / CO / Dindigul, |
| பொருளாளர் | : | **Er. D.Pandi,** JE / 110/22KV SS Kannivadi, Ph. 9976641767 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er. D.Selvaraj,** JE / MM / CO / Dindigul, Ph. 9994986115 |

## சென்னை வடக்கு

**சென்னை வடக்கு** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **11.05.2025** அன்று **பொர்.P.மனோகரன்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.A.அந்தோணி படோவராஜ், பொர்.R.தமிழ்ச்செல்வன்,** சென்னை வடக்கு மண்டலச் செயலாளர், மற்றும் **பொர்.U.ராஜேந்திரன்,** வெளியீட்டுச் செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. P.Manoharan,** AE/Mathur. Ph. 8838761117 |
| துணைத் தலைவர் | : | **Er. M.Sugumar,** AE/Poovalambedu, Ph. 8940449568 |
| செயலாளர் | : | **Er.P.M.Mariyappan,** AEE/Tech., O/o CE/D/ Chennai North Reg.,Ph. 98409 68445. |
| இணைச் செயலாளர் | : | **Er. S.Samraj,** AEE/400KV Thervaikandigai SS, Ph. 9840673081 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. V.Lingesan,** AEE/Mtce/230KV ETPS Switchyard SS, Ph.97909 67488 |
| பொருளாளர் | : | **Er. M.Suresh Babu,** JE Gr2/110KV Manali SS, Ph. 9444716114 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er.C.Appan Srinivasan,** AEE/Mtce./110KV RK Nagar SS,Ph. 9080326638 |
| | | **Er.E.Anandhan,** AEE Mtce./765 KV NCPS, Ph. 9840723451. |

## தேனி

**தேனி** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **11.05.2025** அன்று **பொர்.K.முத்துராமலிங்கம்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.V.S.சம்பத்குமார்,** பொதுச் செயலாளர், **பொர்.G.கதிர்வேல்,** மதுரை மண்டலச் செயலாளர் மற்றும் **பொர்.J.கோபாலகிருஷ்ணன்,** செயலாளர்/சட்டம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. K.Muthuramalingam**, AEE / West Periakulam, Ph. 9976533300. |
| துணைத் தலைவர் | : | **Er. M. Muthuraja,** AE/Shift/K.G Patty SS Gen/T.veli, Ph. 9750636483 |
| செயலாளர் | : | **Er. S.Durairaj,** JE/O&M / West/Theni, Ph. 9751990726 |
| இணைச் செயலாளர் | : | **Er. S. Sakthiprakash,** AE/O&M/South Aundipatty, Ph. 8903971320 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. K. Sureshkannan,** AE / O&M/Devathanapatty Ph. 9578641068 |
| பொருளாளர் | : | **Er. N.Lakshmanan,** JE/O&M / Thevaram-1, Ph. 9944198200 |

## NCTPS & ETPS

**NCTPS & ETPS** கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் **18.05.2025** அன்று **பொர்.K.சிவக்குமார்,** கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **பொர்.N.R.செந்தில்,** மாநிலப் பொருளாளர், **பொர்.T.சிவகீர்த்தி,** மாநிலத் துணைத் தலைவர் / இயந்திரவியல், **பொர்.R.தமிழ்ச்செல்வன்,** சென்னை வடக்கு மண்டலச் செயலாளர், **பொர்.P.M.மாரியப்பன்,** செயலாளர் /தலைமையகம் மற்றும் **பொர்.T.சுகுமார்,** அனல் உற்பத்தி மண்டலச் செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **Er. K.Sivakumar,** AEE / M / BM/NCTPS - II.Ph.7010516607 |
| துணைத் தலைவர் | : | **Er. A.Sivasubramanian,** AEE / M / F&P/NCTPS – III.Ph. 8610360299 |
| செயலாளர் | : | **Er. R.Balakrishnan,** JE1 / M / BM/NCTPS – I.Ph 9445119374 |
| இணைச் செயலாளர் | : | **Er. R.Satheesh Kumar,** JE II / M / MPM/NCTPS - II.Ph. 9443031407 |
| அமைப்புச் செயலாளர் | : | **Er. G.Palvannan,** AEE / E / O&E/NCTPS - I.Ph.9080975039 |
| பொருளாளர் | : | **Er. T.Kannan,** TA / M / CCR/ NCTPS - II. Ph.9445312681 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | **Er. C.R. Mohanraj,** AE / E / EM – I / NCTPS - I.Ph. 9445116021 |
| | | **Er. T.Saravana Kumar,** AEE / E / C&I/NCTPS - I. Ph. 9962214500 |

## SMART METERS TO SOON RECORD POWER CONSUMPTION AT HOME

Chennai: About 3.05 crore smart meters will replace digital electricity meters across the state in the next two-and-a-half years, after which the power utility will Introduce automated monthly reading of consumption. The Tamil Nadu Power Distribution Corporation Ltd (TNPDCL) has floated tenders afresh, inviting bids to install and maintain these meters.

Currently power consumption is assessed once in every two months due to a short-age of manpower. The smart meters will generate automated bills and send messages to consumers via SMS. There are 1.28 lakh smart meters installed in and around T Nagar, yet bi-monthly reading is maintained to avoid confusion.

A TNPDCL official said the winning bidders will procure and install 2.5 crore single-phase smart meters, 50 lakh three-phase meters, 4.72 lakh smart meters for distribution transformers, and 14,000 smart meters for high tension consumers such as industries.

While Union govt will provide 900 per meter to the winning bidder, a maintenance fee will be paid by the state-owned discom. Tamil Nadu Generation and Distribution Corporation (Tangedco) had floated tenders for smart meters in Aug 2023 but these were cancelled after 16 months in Dec last year because the price for maintenance quoted by the bidders was much higher than that paid in other states.

This time, the tenders have been floated as six packages, each package covering two regions.

## Two coal handlers at Ennore to ensure Steady Power Supply

Two additional handlers have been inaugurated at the Ennore Kamarajar port to ensure the free flow of coal to Stages I, II, and III of the North Chennai Thermal Power Station (NCTPS).

The coal handlers were originally planned for the 1600 (2*800) megawatt supercritical Ennore special economic zone thermal plant, which has not seen much progress. TNPDCL officials said that the coal handlers will help move coal required for the newly inaugurated Stage III of NCTPS (800MW), which requires a mixture of domestic and imported coal in equal proportion. "Now, coal for the Stage III plant is stored in the yard. A direct link from the port is expected to be completed in six months. Conveyor belt arrangements have been made to transfer coal to the bunkers of Stage I and II units," said an official.

Officials said construction of coal handlers will be completed two months ahead of schedule. Each of these handlers can unload 2,000 tonnes of coal and handle big vessels with a capacity of 1.2 lakh deadweight tonnage. This will reduce the trips the ships make to bring coal. The existing berths can handle ships with a capacity of 75,000 deadweight tonnage.

Now, there are six coal unloaders in three berths at the Ennore port. Coal is supplied to Stages I and II of the NCTPS from the first berth, while coal from the second berth goes to the NTECL plant. "The fourth berth is also under construction," said Stage II plant Chief Engineer Shanmuga Sethupathi. In 2023, two coal unloaders were inaugurated in Thoothukudi port to shift coal to the Thoothukudi thermal power station.

# கண்ணீர் அஞ்சலி

<u>பொறியாளர் குடும்பத்தினர்கள்</u>

1. 24.04.2025 அன்று **பொர்.S.ஜெயலட்சுமி**, உதவி பொறியாளர்/Mtce/110KV Cooks Road SS, சென்னை மையம் கிளை அவர்களின் **தாயார். 9840652123.**
2. 25.04.2025 அன்று **பொர்.B.கிருஷ்ணகுமார்**, உதவி பொறியாளர்/EBS Computer, சென்னை வளர்ச்சி வட்டம் கிளை அவர்களின் **தாயார். 9884476043.**
3. 13.05.2025 அன்று **பொர்.N.ரவிச்சந்திரன்**, உதவி செயற்பொறியாளர்/இ.பரா/கொப்பம்பட்டி திருச்சி கிளை அவர்களின் **தாயார். 9443504959.**
4. 13.05.2025 அன்று **பொர்.N.சாயி ஹரிஹர கிருஷ்ணன்**, உதவி செயற்பொறியாளர்/விநி/நஷரத், திருநெல்வேலி கிளை அவர்களின் **தந்தையார். 7904552701.**
5. 19.05.2025 அன்று **பொர்.M.S.முருகன்,** இளமின் பொறியாளர்-II/110/11KV சேத்தூர் SS, விருதுநகர் கிளை அவர்களின் **தாயார். 7299281098.**
6. 20.05.2025 அன்று **பொர்.S.வித்யா**, உதவி பொறியாளர்/ இ.ம.பரா/ தென்னூர், திருச்சி கிளை அவர்களின் **தந்தையார். 9489795544.** **அவர் தந்தையாரின் கண்கள் தானம் செய்யப்பட்டுள்ளது.**

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினர்களை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் 2025 ஆண்டு கிளையின் பேரவை கூட்டம்





MTPS






சென்னை வடக்கு





NCTPS & ETPS



திண்டுக்கல்



தேனி



MTPS கிளை 2025 ஆண்டு பேரவைக் கூட்டம் - 04.05.2025



திருவாரூர் கிளையின் சார்பாக 13.05. 2025 அன்று நடைபெற்ற விநியோக பிரிவு பொறியாளர்களுக்கான GIS பயிற்சி வகுப்பு.

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam